பத்தாம் வகுப்பு : காலாண்டுத் தேர்வு
தமிழ் வினா –வங்கி
குறு வினாக்கள்

1. மன்னும் சிலம்பே மணிமேகலை வடிவே முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே –இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள ஐம்பெரும் காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள காப்பியங்களின் பெயர்களை எழுதுக.
2. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன. ஒரு சீப்பில் பலதாறு வாழைப்பழங்கள் உள்ளன. ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன. – மேற்கண்ட தொடர்களைச் சுட்டிக்காட்டி பிழையான தொடரில் உள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.
3.சம்பா நெல் வகைகளை எழுதுக.
4.கோதுமையின் வகைகளைக் குறிப்பிடுக.
5.உலகத் தமிழ் மாநாடு குறித்து அப்பாதுரையார் கூறுவன யாவை?
6.தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.
7.ஐம்பெரும் காப்பியங்கள் யாவை?
8.இரட்டுறமொழிதல் என்றால் என்ன?
9.வேங்கை என்பதைத் தொடர் மொழியாகவும் பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
10.உண்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடுக்காண் வற்றாகும் கீழ். – இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையை சுட்டி அதன் இலக்கணம் தருக.
11.மொழி எத்தனை வகைப்படும்? அவை யாவை?
12.பொது மொழி என்றால் என்ன? சான்று தருக.
13. நமக்கு உயிர் காற்று
காற்றுக்கு வரம் மரம் –மரங்களை
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம் –
இது போன்ற உலக காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்கள் எழுதுக.
14.நாற்றிசையை எழுதி ,அதன் வேறு பெயர்களையும் குறிப்பிடுக.
15.காற்றைக் குறிக்கக்கூடிய வேறு சொற்களை எழுதுக.
16.வாடைக்காற்று – தென்றல் காற்று குறித்து எழுதுக.
17.கொண்டல் காற்று என்றால் என்ன?
18.வசன கவிதை குறிப்பு வரைக
19.பெற்றோர் வேலையில் இருந்து திரும்ப தாமதமாகும் போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.
20.மாஅல் – பொருளும் இலக்கணக்குறிப்பும் தருக.
21.விருச்சி கேட்டல் என்றால் என்ன?
21. தண்ணீர் குடி– தயிர் குடம் ஆகிய தொகைச் சொற்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.
22.விருந்தினரை மகிழ்வித்து கூறும் முகமன் சொற்களை எழுதுக.
23.”தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டு ஒற்றி எடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தார் தலைவி “என்பது இலக்கியச் செய்தி விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.
24.முகமன் வழங்கல் என்ற சொல் உணர்த்தும் பொருள் யாது?
25.இறடி பொம்மல் பெறுகுவிர் –தொடர் உணர்த்தும் பொருள் எழுதுக.
26.”எழுது என்றாள்” என்பது விரைவு காரணமாக “எழுது எழுது என்றாள்” என அடுக்குத்தொடரானது . அப்படியானால் “சிரித்துப் பேசினார்” என்பது எவ்வாறு அடுக்குத்தொடர் ஆகும்?
27.பாரதியார் கவிஞர் – நூலகம் சென்றார் –அவர் யார் ? ஆகிய தொடர்களில் எழுவாய் உடன் தொடரும் பயனிலைகள் யாவை?
28.”<u>நச்சப் படாதவன்</u> செல்வம் “இத்தொடரில் வண்ணமிட்ட சொல்லுக்கான பொருள் தருக.
29.கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய கோடியுண் டாயினும் இல். – இக் குறளில் வரும் அளபெடையை எடுத்து எழுதுக.
30.வருங்காலத்தில் தேவையென கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.
31.மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.
32.உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவை என பரிபாடல் வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.
33. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழி செல்கிறேன் . இத்தொடர் காலவழுவமைதி எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?
34.”சீசர் எப்போதும் என் சொல் பேச்சைக் கேட்பான் புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்” என்ற இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயை பற்றிப் பெருமையாகக் கூறினார்இ – இதில் உள்ள திணை வழுக்களைத் திருத்தி எழுதுக.
35.அமர்ந்தான் – பகுபத உறுப்பிலக்கணம் எழுதுக.

36.இயற்றிய நூலைத் தானே மொழிபெயர்த்து அதனால் சிறப்பு அடைந்தவர் யார் ?அவர் பெற்ற சிறப்பு யாது?
37.செய்கு தம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத்தொடர்கள் ஆக்குக.
38.சதாவதானம் என்றால் என்ன?
39.செய்குத்தம்பி பாவலர் 'சதாவதானி 'எனப் போற்றப்பட காரணம் யாது?
40.கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்து கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல் மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென் சொல்
– இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல் மிகு கேண்மையினான் யார்
41.இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது. இதோ இருக்கிறது . சொடுக்கி போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே ?மின்சாரம் இருக்கிறதா? இல்லையா? – மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்து எழுதுக.
42."கலைஞர்,பழுமரக் கனிப் பயன் கொள்ளும் பேச்சாளர்.படித்தவரைக் கவரும் ஆற்றல் கொண்ட எழுத்தாளர்"–பேராசிரியர் அன்பழகனார்.இக் கூற்றை அயற்கூற்றாக எழுதுக.
43.கம்பராமாயணம் – குறிப்பு வரைக.
44. "சாந்தமான தொரு பிரபஞ்சத்தை சுமக்கின்ற ஒல்லித் தண்டுகள்" இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளுறையை எழுதுக.
45.உறங்குகின்ற கும்பகன்ன எழுந்திராய் எழுந்திராய் காலத்து கையிலே உறங்குவாய் உறங்குவாய்
– கும்பகர்ணனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்க சொல்கிறார்கள்?
46.காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உள்ள சுவை மிகுந்து இருக்கும். இத் தொடரில் அமைந்துள்ள முதற்பொருள் கருப்பொருள் எழுதுக.
47.கீழ் வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருள்களை திருத்தி எழுதுக.
உழவர்கள் மழையில் உழுதனர். முல்லை பூச்செடியை பார்த்தவாரே பரதவர் கடலுக்குச் சென்றனர்.
48."சுரப்பிடும்பை இல்லார் " இத்தொடரின் பொருள் கூறுக.
49.வறுமையின் காரணமாக உதவி கேட்டு வருபவர் தன்மானத்தை எள்ளி நகையாடுவது குறித்து குறளின் கருத்து யாது?
50.பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்று செந்நாப்போதார் கூறுகிறார் ஏன் என்பதை எழுதுக.
பெரிய கத்தி – இரும்பு ஈட்டி– உழைத்ததால் கிடைத்த ஊதியம் – வில்லும் அம்பும்

## சிறு வினாக்கள்

1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாக பாவலரேறு சுட்டுவன யாவை,
2.அன்னை மொழியே பாடலில் குறிப்பிடப்படும் நூல்கள் எவை?
3.புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது– இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடரில் அமைக்க.
4.தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.
5."அறிந்தது –அறியாதது– புரிந்தது– புரியாதது –தெரிந்தது தெரியாதது –பிறந்தது– பிறவாதது இவை அனைத்தையும் யாம் அறிவோம் அது பற்றி உமது அறிவுரை எமக்குத் தேவையில்லை. எல்லாம் எமக்குத் தெரியும் "இக்கூற்றில் வண்ண எழுத்துக்களில் உள்ள வினைமுற்றுகளைத்தொழில் பற்றி எழுதுக.
6.உயிராக நான்– பல பெயர்களில் நான் – நான்கு திசைகளிலும் நான் –இலக்கியத்தில் நான்– நாவாய் ஓட்டியாக நான் முதலிய தலைப்புகளில் காற்று தன்னை பற்றி பேசுகிறது. இவ்வாறு நீர் தன்னைப் பற்றி பேசினால் உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.
7.சோலை காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக் கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.
8.ஹிப்பாலஸ் பருவக்காற்று குறிப்பு வரைக.
9.தோட்டத்தில் மல்லிகை பூ பறித்த பூங்கொடி வரும் வழியில் ஆடு மாடுகளுக்குத் தண்ணீர் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க் கடிகாரத்தில் மணி பார்த்தாள். – இப்பகுதியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளை குறிப்பிட்டு விரித்து எழுதுக.
10.புதிதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அதில் தலை வைக்க திண்டும் அமைத்தனர். திருவிழா காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும்

அழைத்து அன்போடு விருந்து அளிப்பதை சில இடங்களில் காணமுடிகிறது.

–இப்படியாக காலமாற்றம் தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்து கருத்துக்களை எழுதுக.

11.மினசோட்டா வாழை இலை விருந்து விழா பற்றி குறிப்பிடுக.

12.வாழை இலையில் உணவு பரிமாறும் முறையைக் குறிப்பிடுக

13.விருந்தோம்பல் செய்யும் முறை குறித்து காசிகாண்டம் குறிப்பிடும் செய்தி யாது?

14.முல்லை நிலத்தில் இருந்தும் மருத நிலத்தில் இருந்தும் கிடைக்கும் உணவு வகைகள் யாவை?

15.கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதல் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

16.கண்ணே கண்ணுறங்கு
காலையில் நீயெழும்பு
மாமழைப் பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு
பாடினேன் தாலாட்டு
ஆடி ஆடி ஓய்ந்துஉறங்கு

–தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

17.”பலர் புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ?–வினவுவது ஏன்?

18. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றன என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக

19. மனிதர்களின் மூளையைப் போன்றது செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினியின் மென்பொருள். மனிதனைப் போலவே பேச எழுத சிந்திக்க இத்தொழில்நுட்பம் மேம்படுத்தப்படுகிறது. இதனால் மனித குலத்துக்கு ஏற்படுகின்ற நன்மைகளைப் பற்றி அறிவியல் இதழ் ஒன்றுக்கு எதிர்கால தொழில்நுட்பம் என்ற தலைப்பில் எழுதுக.

20.வேர்ட்ஸ்மித் – வாட்சன் – பெப்பர் – இலா ஆகியவை குறித்து எழுதுக.

21.”மாளாத காதல் நோயாளன் போல் “என்னும் தொடரில் உள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

22.குலசேகரர் திருவித்துவக்கோடு இறைவனிடம் வேண்டுவது யாது?

23.உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்தி வேலைக்கு செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்து இருப்பீர்கள்?

24.மொழிபெயர்ப்பு தவறாக ஏற்படுமாயின் ஏற்படும் இன்னல்கள் குறித்து சான்று தருக.

25.மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக.

26.”முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை இன்மை புகுத்தி விடும் “ இக்குறட்பாவில் அமைந்த பொருள்களின் வகையைச் சுட்டி விளக்குக.

27.தமிழ்மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்து கொண்ட இரண்டினை எழுதுக.

28.நவீன கவிதைகளில் வெளிப்படும் நுண்மை உள்ளம். பூ தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுகின்றதை ஒப்பிட்டு எழுதுக.

29.வைத்தியநாதபுரம் முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்கள் உடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.

30.கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது. மலைப்பகுதியில் மலைப்பயிர்களும் நிலப்பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன. காலப் போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும் பண்டைத்தமிழரின் திணைநிலை தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியும் எழுதுக.

31.வள்ளுவம் சிறந்த அமைச்சருக்கு உரிய இலக்கணங்கள் நமக்கு பொருந்துவதை குறள் வழி விளக்குக.

32.பலரிடம் உதவி பெற்று கடின உழைப்பால் முன்னேறிய ஒருவர். அவருக்கு உதவிய நல்ல உள்ளங்களையும் சுற்றங்கலையும் அருகில் சேர்க்கவில்லை. அவருக்கு உணர்த்தும் நோக்கில் வள்ளுவர் குறிப்பிடும் கருத்துகள் யாவை?

## நெடுவினாக்கள்

1.மனோன்மணியம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.

2.தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்து தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான குறிப்புகளை எழுதுக.

3.முல்லைப் பாட்டில் உள்ள கார்கால செய்தியைத் தொகுத்து எழுதுக.

4.உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

5.ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்கு புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களையும் நோக்கி வெளிப்படுத்துவதாக இருந்தது .அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறி இருப்பதை விளக்குக.

6.ஒரு குழந்தையைத் தூக்கவும் – கீழே விழுந்த ஒரு தேனீர் கோப்பையை எடுக்கவும் – மென்பொருள் அக்கறை கொள்ளும் – ஆர்வத்துடன் நின்று விடுமா இக்கருத்துக்களை ஒட்டி செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

7.இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்து நிகழ்வை நயத்துடன் எழுதுக.

8.சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக

9.போராட்டக் கலைஞர் – பேச்சுக் கலைஞர் –நாடகக் கலைஞர் –திரைக் கலைஞர் – இயற்றமிழ்க் கலைஞர் ஆகிய தலைப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

### விரிவானம்

1.புயலிலே ஒரு தோணி
2.கோபல்லபுரத்து மக்கள்(அன்னமய்யா)
3.விண்ணைத் தாண்டிய நம்பிக்கை(ஸ்டீபன் ஹாக்கிங் –விண்வெளிப்பயணம்)
4.புதிய நம்பிக்கை(கற்கை நன்றே... மேரி)

### கடிதம்

1.மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப்போட்டி – தோழன் வாழ்த்தி மடல்.
2.உணவுவிடுதி : புகார் கடிதம்
3.நூல் மதிப்புரை
4.நெகிழிப் பையின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம்:பாராட்டுரை எழுதுக.

### பொதுக்கட்டுரை

1.சான்றோர் வளர்த்த தமிழ்
2.விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்
3.கலைத்திரு விழா நிகழ்வு

### அணி இலக்கணம்

1.உவமை அணி
2.எடுத்துக்காட்டு உவமை அணி
3.வஞ்சப்புகழ்ச்சி அணி
4.சொல் பின்வரு நிலையணி
5.தற்குறிப்பேற்ற அணி

**ஆக்கம் :**

**ச.சேட்டு மதார்சா,ப.ஆசிரியர்(தமிழ் )**

ச.சே. @ www.Padasalai.Net